**<u>தகவல் தொழில்நுட்பவியல் துறை</u>**

## <u>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் விதி 110-இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்படவுள்ள வரைவு அறிவிப்புகள்</u>

**1. பிறப்பு முதல் இறப்பு வரையில் அரசால் வழங்கப்பட வேண்டிய அனைத்து சேவைகளையும் பொதுமக்களுக்கு விண்ணப்பமேதுமின்றி தாமாகவே முன்வந்து வழங்குதல்**

மின்னணு ஆட்சிமையின் சூழ்நிலையில், பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அதன் நிறுவனங்களிலிருந்து சான்றிதழ்கள், ஆவணங்கள், உரிமங்கள் போன்ற பல்வேறு அரசு சேவைகளைப் பெற வேண்டி பொதுமக்கள் அத்துறை சார்ந்த அலுவலகங்களுக்குச் சென்று விண்ணப்பித்து பெறுவது மட்டுமல்லாமல் அரசு இ-சேவை மையங்கள், இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி வாயிலாகவும் விண்ணப்பித்து பெற்று வருகின்றனர்.

பொதுமக்களுக்கு இந்த சேவைகளை வழங்க, அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான பரிவர்த்தனைகளை முடிந்தவரை இடையூற்றதாக மாற்றுவது அரசின் கடமையாகும். "அரசைத் தேடி மக்கள்" என்ற இந்நிலையை மாற்றி "மக்களைத் தேடி அரசு" என்ற வகையில் இனி பொதுமக்களுக்குப் பிறப்பு முதல் இறப்பு வரை, அரசால் வழங்கப்பட வேண்டிய அனைத்து சேவைகளும் விண்ணப்பமேதுமின்றி துல்லியமாகக் குறிப்பறிந்து வழங்கப்படும்.

இச்சான்றிதழ்கள் / ஆவணங்கள் வழங்கிட பயன்படுத்தப்படும் மென்பொருள் தகுந்த முறையில் மாற்றியமைக்கப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள 7 கோடி மக்களுக்கும் தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் (TNeGA) உருவாக்கப்பட்டுள்ள "மக்கள் எண்" வாயிலாக குடிமகன் பெட்டகத்தை (Citizen Vault) அவர்களது ஆவணங்கள் மின்னணு முறையில் சென்றடையும். ஒவ்வொரு நபரும் தன்னுடைய சான்றிதழ்கள் / ஆவணங்களைக் குடிமகன் பெட்டகத்திலிருந்து பெற்றிட தன்னுடைய கைப்பேசி எண்ணை பயனர்

குறியீடாகவும் (User ID) மற்றும் ஒருமுறை கடவுச்சொல்லைப் (OTP) பயன்படுத்தியும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் பல்வேறு அரசுத் துறைகள் / நிறுவனங்கள் மூலமாக பிறப்பு சான்று முதல் இறப்புச் சான்று வரை மற்றும் இடைப்பட்ட இன்னபிற சான்றிதழ்கள் / ஆவணங்களை தனிநபர் பெறத் தகுதிபெறும் தருணத்தில், பாதுகாப்புச் சங்கிலி சார்ந்த அமைப்பு ஒன்று சம்பந்தப்பட்ட துறை நிறுவனத்தின் மென்பொருளுக்கு நினைவூட்டி உரிய தருணத்தில் அரசு துறைகள் மற்றும் நிறுவனங்கள் வழங்கும் பல்வகை சான்றுகளை உடனடியாக வழங்கிட வழிவகை செய்திடும்.

அரசு துறைகள்/ நிறுவனங்கள்/ தனியார் நிறுவனங்கள், விண்ணப்பதாரரின் ஒப்புதலோடு அவரின் தகுதியின் உண்மைத் தன்மையினை மின்னணு முறையில் சரிபார்க்கலாம். இந்தத் திட்டம் ரூ.90 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

2. **தமிழ்நாடு அரசுக்கான முதுகெலும்பாகச் செயல்படும் நம்பிக்கை இணைய (BlockChain Backbone Infrastructure) உட்கட்டமைப்பு நிறுவுதல்**

வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் ஒன்றான நம்பிக்கை இணையம் (Blockchain) எனும் தொழில்நுட்பம் பரிவர்த்தனைகளில் உள்ள உண்மைத்தன்மையினை அறிந்திட உதவும். இந்த நம்பிக்கை இணையம் தொழில்நுட்பத்தில் சேகரிக்கப்பட்டுள்ள தகவல்கள் / தரவுகள் மாற்ற இயலாது.

தமிழ்நாடு அரசின் மின்னணுத் தரவுகள் மற்றும் மின்னணுப் பரிவர்த்தனைகளின் மேலாண்மையில் அவற்றின் நம்பகத்தன்மை மற்றும் தன்னிச்சையான உறுதித் தன்மையை மூன்றாம் தரப்பின் உதவியின்றியும், ஊடுருவலற்ற இணையப் பாதுகாப்புடன் சரிபார்த்திட உதவிடும் வகையில் ஒரு முதுகெலும்பாகச் செயல்படும் நம்பிக்கை இணைய கட்டமைப்பு (BlockChain Backbone Infrastructure) தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் சுமார்

ரூ. 40.80 கோடி செலவினத்தில் அமைக்கப்படும். இதனை "**தமிழ்நாடு நம்பிக்கை இணையம்**" என்ற பெயரில் அறியப்படும்.

இக்கட்டமைப்பு, அனைத்து அரசுத் துறைகளும், நம்பிக்கை இணைய முனையங்கள் பராமரிக்க தேவையற்ற ஒரு சேவையாக வழங்கப்பட உள்ளது. இதனால் அத்துறைகள் நம்பிக்கை இணைய முனையங்களின் பதிவேற்றம் இல்லாமல் தங்களது தகவல்களை தன்னிச்சையாக சரிபார்க்க முடியும். நம்பிக்கை இணைய தொழில்நுட்பம் எந்தவொரு டிஜிட்டல் தரவுகளின் உறுதி மற்றும் மாற்றம் உண்டாக்க முடியாத உண்மையான மற்றும் நம்பகத்தன்மையை மூன்றாம் தரப்பின் உதவியின்றி தன்னிச்சையாக கணிதமுறையில் சரிபார்க்க உதவும். இது பொதுமக்கள் பயன்பாடு மற்றும் அனுபவத்தில் கவனம் செலுத்தும் மென்பொருள் பயன்பாடுகளுக்கு இணைய பாதுகாப்பு மற்றும் தகவல் நம்பகத்தன்மையை வழங்குகிறது.